பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 134 நாள்: 06.09.2018

**காசிமேடு மின் மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் முல்லை நகர் மயானபூமியை பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

= = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, தண்டையார்பேட்டை மண்டலம், பகுதி–10, கோட்டம்–43, சூரியநாராயணா தெரு, காசிமேடு இந்து மயான பூமியில் எரிவாயு தகன இயந்திரத்தில் சுடுகல் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், 08.09.2018 முதல் 17.09.2018 வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில் காசிமேடு இந்து மயான பூமியில் இலவசமாக கட்டை மற்றும் வறட்டி மூலம் உடலை தகனம் செய்யலாம் எனவும், மேலும், சென்னை–39, வியாசர்பாடி, இந்திரா நகர் பிரதான சாலை, முல்லை நகர் இந்து மயான பூமியையும் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**